# பொருளாதாரச் செயலாற்றம்—1985

## பொதுவான நோக்கு

பாதகமான வெளிநாட்டுப் பொருளாதார சூழ்நிலை, நாட்டின் சில பகுதிகளில் நிலவும் உள்நாட்டு அமைதியின்மை என்பனவற்றின் மத்தியில் 1985 இல் நிலையான விலைகளுடன் பொதுவான பொருளாதார வளர்ச்சி 5 சதவீதத்தினை அடைந்தமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். இவ் வளர்ச்சிக்கான மூலங்கள் முக்கியமாக வேளாண்மையிலும் தயாரிப்பிலுமிருந்து ஏற்பட்டன.

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட 5 சதவீத வளர்ச்சியானது 1984 இல் ஏற்பட்ட 5.1 சதவீத அதிகரிப்புடனும் 1983 இல் ஏற்பட்ட 5 சதவீத வளர்ச்சியுடனும் ஒப்பிடக்கூடியதாகும். காரணி வருமானத்தின் தேறிய வெளிப்பாய்ச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சியானது உண்மையான மொத்தத் தேசிய உற்பத்தியில் 5.3 சதவீத அதிகரிப்பை ஏற்படுத்தியது. இது 1984 இல் ஏற்பட்ட 5.1 சதவீத அதிகரிப்புடனும் 1983 இல் ஏற்பட்ட 4.1 சதவீத அதிகரிப்புடனும் ஒப்பிடத்தக்கது. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளிலான மொத்தத் தேசிய உற்பத்தி 1984 இனைவிட 6.7 சதவீதம் கூடுதலாக விளங்கியது. தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி 3.7 சதவீதத்தினால் அதிகரித்து 1985 இல் ரூ. 9,219 (ஐ.அ. டொலர் 339) ஆக விளங்கியது.

உள்ளடக்க மொத்தத் தேசிய உற்பத்திச் சுருக்கியில் 1.5 சதவீதத்தினால் மட்டும் பெறப்பட்ட அதிகரிப்பு முந்திய ஆண்டில் ஏற்பட்ட 17.4 சதவீத வளர்ச்சிக்கு முற்றும் மாறானதாகும். கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் காட்டப்பட்டவாறு நுகர்வோர் விலைகளின் அதிகரிப்பும் 1.5 சதவீதமாக இருந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட இவ் அதிகரிப்பு 1978 இன் பின்னர் காணப்பட்ட அதிகரிப்பில் ஆகக் குறைவானதாகும். வேளாண்மைப் பொருட்களின் அதிகரித்த நிரம்பல், இறக்குமதி விலைகளின் நிலையான தன்மை, பெற்றோலியப் பொருட்களின் நிலையான உள்நாட்டு விலைகள், 1984 இன் பணவீக்கமற்ற நிதிக் கொள்கைகளின் காலம் தாழ்த்திய விளைவு, 1984 இல் இருந்து கடைப்பிடிக்கப்பட்ட கட்டுப்பாடான கடன்கொள்கைகள் என்பன இக் குறைந்த வீதத்திலான பணவீக்கத்திற்குப் பொறுப்பான காரணிகளாகும்.

பொருட்களின் விலைகளில் குறிப்பாகத் தேயிலை, தெங்கு என்பனவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சி 1985 இல் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க பாதகமான பொருளாதார அபிவிருத்தியாகும். சுற்றுலாப் பயணத்தில் ஏற்பட்ட தொடர்ச்சியான குறைப்பு, அதன் விளைவாகச் சுற்றுலாவில் தங்கியிருக்கும் பணிக் கைத்தொழில்களில் ஏற்பட்ட வீழ்ச்சி, பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் மீதான அதிகரித்த செலவு, வெளிநாட்டு முதலீடுகள் குறைவடைந்தமை, நாட்டின் வடக்குக் கிழக்குப் பகுதிகளின் பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட தடைகள் என்பன 1985 இன் ஏனைய பாதகமான பொருளாதார அபிவிருத்திகளாகும்.

இப்பாதகமான காரணிகள்இருந்தபோதும் பொருளாதாரம் இவ்விரும்பத்தக்க வீதத்தில் வளர்ச்சியடைந்தமைக்கு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறக்குறைய நாலில் ஒரு பகுதிக்கு வகை கூறும் வேளாண்மைத்துறையில் ஏற்பட்ட தொடர்ச்சியான விரிவாக்கம் காரணமாக அமைந்தது. மாறிவரும் பாதக மான காலநிலை நிலைமைகள் காரணமாக 1984 இல் வீழ்ச்சியடைந்த நெல் உற்பத்தி அதன் அண்மைக்கால உயர்ந்த வளர்ச்சிப் பாதைக்குத் திரும்பி 1985 இல் 10 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. தெங்கு உற்பத்தி 52 சதவீதத்தால் பெருமளவில் அதிகரித்தது. முந்திய ஆண்டில் 16 சதவீதத்தினுல் வளர்ச்சியடைந்த தேயிலை உற்பத்தி மேலும் 3 சதவீதத்தினுல் அதிகரித்தது. உள்நாட்டு வேளாண்மை, பெருந்தோட்டப் பயிர்கள் ஆகிய இரண்டிலும் ஏற் பட்ட இவ்வபிவிருத்திகளும் இவற்றின் பயனுக வேளாண்மைப் பதனிடல்களிலும் வர்த்தகத்திலும் ஏற்பட்ட விளைவுகளும் பொருளாதாரத்தில் 5 சதவீத வளர்ச்சி வீதத்தினைப் பேணுவதற்குப் பெருமளவிற்குப் பொறுப்பாகக் காணப்பட்டன.

1984 இல் 15 சதவீதத்தினுல் அதிகரித்த கைத்தொழில் உற்பத்தி தொடர்ந்து வளர்ச்சியடைந்தது. ஆனுல் இது 5 சதவீதமான மெதுவான வளர்ச்சி வீதமாகக் காணப்பட்டது. இவ்வளர்ச்சி மீண்டும் தனியார் துறைக் கைத் தொழிலிலேயே ஏற்பட்டது. இதன் கைத்தொழில் வெளியீட்டுப் பெறுமதி 20 சதவீதத்தினுல் அதிகரித்தது. தனியார் தயாரிப்புத்துறை 1984 இன் 26 சதவீத வளர்ச்சிக்கு மேலாக இவ் உயர்ந்த வளர்ச்சி வீதத்தினைப் பதிவு செய்த வேளையில் அரசதுறை கைத்தொழில் 1985 இல் 6 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது.

1985 இல் தொழில் வாய்ப்பு உருவாக்கம் ஓரளவு மட்டுப்படுத்தப்பட்ட தாகக் காணப்படுகின்றது. அரசதுறை வேலைவாய்ப்பு 1.5 சதவீதத்தினுல் அதி கரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனுல் அரசுசார் நிறுவனங்களின் வேலை வாய்ப்பு 2.4 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. அரசுசார் நிறுவனங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி பெரும்பாலும் பல அரசதுறை முயற்சிகளின் பொருளியல் தெளிவாற்றல், குறைந்த செயலாற்றத்தைக் கொண்ட சில அரசுசார் முயற்சிகள் தனியார் வசமாக்கப்பட்டமை என்பவற்றின் பிரதிபலிப்பாகும். எனினும் தனி யார் துறைத் தொழில்வாய்ப்பு நன்கமைந்த, நன்கமையாத துணைத்துறைகள் இரண்டிலும் ஓரளவு அதிகரித்துக் காணப்பட்டது. எனினும் உறுதியான தரவுகள் இன்னும் கிடைக்கத்தக்கனவாகவில்லை.

ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட பெருமளவிலான வீழ்ச்சி காரணமாக நாட் டின் வர்த்தக செயலாற்றம் பாதகமாக அமைந்தது. 1972 இற்குப் பின் முதன் முதலாக ஏற்றுமதிகளின் பெறுமதி வீழ்ச்சியடைந்தவேளையில் இறக்குமதிச் செலவு முந்திய இரு ஆண்டுகளினதையும் விடக் கூடிய வேகத்தில் வளர்ச்சியடைந்தது.

தேயிலை விலைகள் 26 சதவீதத்தினுலும், இறப்பர் விலைகள் 23 சதவீதத் தினுலும், தெங்கு விலைகள் 49 சதவீதத்தினுலும் வீழ்ச்சியடைந்தமையிலிருந்து பொருட்களின் விலை வீழ்ச்சிகளின் தாக்கத்தின் அளவினைக் கணிக்கக்கூடியதாக வுள்ளது. 1977 தொடக்கம் தொடர்ச்சியான அதிகரிப்பைக் காட்டிய புடவைகள், தைக்கப்பட்ட ஆடைகள் என்பனவற்றின் ஏற்றுமதி 1 சதவீதத்தினுல் வீழ்ச்சி யடைய ஏனைய கைத்தொழில் பொருட்கள் 4 சதவீதத்தினுல் அதிகரித்தன. பெற்றோலியப் பொருட்களின் ஏற்றுமதிகளில் 11 சதவீத அதிகரிப்புக் காணப்பட்டபோதிலும் மரபு ரீதியற்ற எல்லா ஏற்றுமதிகளிலுமிருந்து கிடைத்த ஒன்று சேர்ந்த ஏற்றுமதி வருவாய்கள் 8 சதவீதத்தினுல் மட்டும் அதிகரித்தன.

வணிக இறக்குமதிகள் மீதான அதிகரித்த செலவு நுகர்வோர், இடைநிலைப் பொருட்கள் உயர்ந்தளவில் இறக்குமதி செய்யப்பட்டதன் விளைவாக ஏற்பட்டதாகும். அரிசி, சீனி, கோதுமை போன்ற உணவு விடயங்களின் அதிகரித்த இறக்குமதி நுகர்வோர் இறக்குமதிகள் மீதான உயர்ந்த செலவிற்கான முக்கிய காரணமாகும். இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான அதிகரித்த செலவிற்குப் பெருமளவிலான வளமாக்கி இறக்குமதிகள் வகை கூறின.

1985 இல் சென்மதி நிலுவையில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி மிகவும் பாதகமான விளைவுகளில் ஒன்றாகும். நடைமுறைக் கணக்கு, மொத்த நிலுவை ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட வீழ்ச்சி, முக்கியமாக வேளாண்மை உற்பத்திப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி, பெரும்பாலான மரபுரீதியற்ற ஏற்றுமதிகளின் குறைந்த செயலாற்றம், அதிகரித்த இறக்குமதி அளவுகள் என்பன காரணமாக ஏற்பட்டதாகும்.

வலுவின் நிலையை முன்னேற்றுவதற்காக அண்மை ஆண்டுகளில் எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் 1985 இல் குறிப்பிடத்தக்க பயன்களைக் காட்டின. 1985 இல் அதிகரித்த அளவிலான நீர் மின்வலுவின் உற்பத்தி உயர்ந்த அளவிலான நிறுவப்பட்ட இயலளவு, நீர்த்தேக்கங்களில் போதியளவு நீர் மட்டம் காணப்பட்டமை என்பனவற்றால் ஏற்பட்டதாகும். நீர் மின்வலுவின் நிரம்பல் அதிகரித்தமை வலுவின் நிரம்பலை அதிகரித்தது மட்டுமன்றி எண்ணெயை அடிப்படையாகக் கொண்ட வெப்ப மின்வலுவின் உற்பத்தியைக் கணிசமான அளவு குறைத்ததுடன் பெற்றோலியத்தின் நுகர்வினையும் குறைத்தது. இதன் விளைவாக வர்த்தக ரீதியான மொத்த வலு நிரம்பலில் பெற்றோலியத்தின் பங்கு 1984 இன் 60 சதவீதத்திலிருந்து 1985 இல் 54 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இவ் அபிவிருத்திகள் பெற்றோலியப் பொருட்களின் குறைவான பன்னாட்டு விலைகளுடன் இணைந்து பெற்றோலிய இறக்குமதிகளின் சிஎஉ நியதிகளிலான இறக்குமதிப் பெறுமதிகளை 9 சதவீதத்தினால் குறைவடையச் செய்து அதன் விளைவாகச் சென்மதி நிலுவை மீதான தாக்கத்தினையும் கட்டுப்படுத்தியது.

அரசின் நிதித் தொழிற்பாடுகளில் முந்திய இரு ஆண்டுகளின் போக்கில் முரண்பாடு காணப்பட்டது. 1985 இன் வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகள் முந்திய ஆண்டினை விட விரிவுடையதாகக் காணப்பட்டது. பெரும்பாலும் ஏற்றுமதிப் பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்தமை காரணமாக ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த அரசின் அரசிறை குறைவடைந்தமை, முக்கிய பாதுகாப்புத் தொடர்பான நடவடிக்கைகளினாலும் அரச கூட்டுத்தாபனங்களின் இழப்புக்களினாலும் அரசின் செலவு தொடர்ந்து விரிவடைந்து சென்றமை என்பன வரவு செலவுத்திட்டப் பற்றாக் குறையை அதிகரித்தன. பற்றாக் குறையை நிதியிடுவதில் வெளிநாட்டு மூலங்களிலிருந்தும் விரிவுத்தாக்கமற்ற மூலங்களிலிருந்தும் கிடைக்கக் கூடியதாகவிருந்த மூலவளங்கள் தேவையானதைவிடக் குறைவாக இருந்தமையால் அரசுவிரிவுத்தாக்க நிதியிடலை நாடவேண்டியதாயிற்று.

பணக்கூட்டுக்களின் வீழ்ச்சிப் போக்கு அரசிற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட பெருமளவிலான அதிகரிப்பு, தனியார்துறைக்கான கொடுகடனில் ஏற்பட்ட மிதமான அதிகரிப்பு வங்கித்தொழிலின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி, குறைக்கப்பட்ட வைப்பு வீதங்கள் என்பன 1985 இன் முக்கிய நாணய, கொடுகடன் அபிவிருத்திகளாகும்.

பணக்கூட்டுக்கள் தொடர்ந்து இரண்டாவது ஆண்டிலும் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து சென்றன. அரசிற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட பெருமளவிலான அதிகரிப்பு, தனியார்துறைக்கான கொடுகடனில் ஏற்பட்ட மிதமான அதிகரிப்பு, வங்கித்தொழிலின் (தேறிய) வெளிநாட்டுச் சொத்துக்களில் வீழ்ச்சி என்பவற்றின் பின்னணியிலும் இது அடையப்பட்டது. குறுகிய பணநிரம்பல் (M 1) 1984 இன் 14 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 12 சதவீதத்திஞல் அதிகரிக்க, விரிந்த பணநிரம்பல் (M 2) முந்திய ஆண்டின் 17 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 11 சதவீதத்திஞல் அதிகரித்தது.

## மொத்தத் தேசிய உற்பத்தி, வருமானம், செலவு

மொத்த உள்நாட்டு உற்பத்தி 1984 இன் 5.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1985 இல் 5.0 சதவீதத்திஞல் அதிகரித்தது. காரணி வருமானத்தின் தேறிய வெளிப்பாய்ச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சி உண்மையான மொத்த தேசிய உற்பத்தியில் 1984 இல் ஏற்பட்ட 5.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 5.3 சதவீத அதிகரிப்பை ஏற்படுத்தியது.

நடைமுறைக் காரணிச் செலவு விலைகளிலான மொத்தத் தேசிய உற்பத்தி 1985 இல் ரூ. 1,460,000 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 1984 இனதைவிட 6.9 சதவீதம் கூடுதலானதாகும். உள்ளடக்க விலைச்சுருக்கி முந்திய ஆண்டில் 17.4 சதவீதத்திஞல் அதிகரித்தமைக்கு மாருக 1.5 சதவீதத்திஞல் மட்டும் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்தத் தேசிய உற்பத்தி சுருக்கியில் ஏற்பட்ட இக்குறிப்பிடத்தக்க வீழ்ச்சி பெரும்பாலும் முக்கிய வேளாண்மைப் பொருட்களின் ஏற்றுமதி விலைகள் குறைவடைந்தமையிஞல் ஏற்பட்டதாகும்.

1985 இல் இலங்கையின் நடு ஆண்டுக் குடித்தொகை 158 இலட்சமாக தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 1984 இன் வளர்ச்சி மட்டத்தினை விட 1.5 சதவீதம் கூடுதலானதாகும். எனவே தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி 5.3 சதவீதத்திஞல் அதிகரித்து ரூ. 9,219 (ஐ.அ. டொலர் 339) ஆக விளங்கியது. உண்மை நியதிகளிலான தலைக்குரிய வருமானம் 3.7 சதவீதத்திஞல் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மொத்த உள்நாட்டுச் செலவின் அதிகரிப்பு வீதம் தொடர்ந்து குறைவடைந்து சென்றது. இது 1983 இன் 18.6 சதவீத வளர்ச்சி வீதத்துடனும், 1984 இன் 16.4 சதவீத வளர்ச்சி வீதத்துடனும் ஒப்பிடுகையில் 1985 இல் இது 10.0 சதவீதமாக விளங்கியது.

1985 இன் நடைமுறைச் சந்தை விலைகளிலான மொத்த உள்நாட்டுச் செலவு முந்திய ஆண்டினைவிட ரூ. 163,000 இலட்சத்திஞல் அதிகரித்து ரூ. 1,790,000 இலட்சத்தினை அடைந்தது. தனியார் நுகர்வுச் செலவு 1985 இல் 10.7 சதவீதத்திஞல் அதிகரித்து ரூ. 1,232,000 இலட்சத்தினை அடைந்தது. இவ் எண்தொகையில் வெளிநாட்டுப் பொருட்கள் பணிகள் மீதான ரூ. 270,000 இலட்சங் கொண்ட செலவு முந்திய ஆண்டினை விட 24.3 சதவீதம் அதிகமானதாகும். அதேவேளை உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மீதான ரூ. 962,000 இலட்சம் கொண்ட தொகை முந்திய ஆண்டினதை விட 7.4 சதவீதம் கூடியதாகும். அரசதுறையின் நுகர்வுச் செலவு முந்திய ஆண்டினதைவிட 23.4 சதவீதத்திஞல் அதிகரித்தது.

கையிருப்புக்களின் மாற்றங்களையும் உள்ளடக்கிய மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் முந்திய ஆண்டின் 13.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 4.1 சதவீதத்தினுல் மட்டும் அதிகரித்தது. தனியார்துறை, அரச கூட்டுத்தாபனங்கள் ஆகிய இரண்டினதும் மூலதன ஆக்கம் 1984 இன் 11.8 சதவீத வளர்ச்சிக்கு மாருக 7.3 சதவீதத்தினுல் வீழ்ச்சியுற்றது. அரசதுறையின் மொத்த மூலதன ஆக்கம் முந்திய ஆண்டின் 18.9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1985 இல் 57.3 சதவீதத்தினுல் அதிகரித்தது.

மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் முந்திய ஆண்டின் அதிகரிப்பான 11.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 3.9 சதவீதத்தினுல் சிறிதளவால் அதிகரித்தது. இறக்குமதி செய்யப்பட்ட முதலீட்டுப் பொருட்களின் மொத்தப் பெறுமதி 1984 இல் ஏற்பட்ட 5.0 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 17.1 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைய மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கத்தின் இறக்குமதி உள்ளடக்கம் 1984 இன் 28.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1985 இல் 23.1 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. மகாவலி நீர்ப்பாசனத் திட்டத்தின் முக்கிய வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டமை மூலதனப் பொருட்களின் இறக்குமதியில் பெருமளவு குறைப்பினை ஏற்படுத்தியது.

1985 இல் மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கத்தில் மிகப் பெரும் பங்கு (73.2 சதவீதம்) தனியார்துறையிலும் அரச கூட்டுத்தாபனங்களிலும் ஏற்பட்டது. 1984 இனைப் போன்று மூலதன ஆக்கத்தில் மிகப் பெரும் பங்கு கட்டட மற்றும் ஏனைய நிருமாணத்தில் ஏற்பட்டது. காணி அபிவிருத்தி, மீள்நடுகை என்பவற்றிலான மூலதன ஆக்கம் 32.1 சதவீதத்தினுல் அதிகரித்தது.

1985 இல் பொருளாதாரத்திற்குக் கிடைக்கக்கூடியதாக இருந்த மொத்த மூலவளங்கள் ரூ. 2,213,000 இலட்சமாகும். இதில் ரூ. 1,598,000 இலட்சம் உள்நாட்டு மூலங்களிலிருந்தும் ரூ. 615,000 இலட்சம் இறக்குமதிகளிலிருந்தும் கிடைத்தது. உள்நாட்டு மூலவளங்கள் 1984 இன் 74.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1985 இன் மூலவளங்களில் 72.2 சதவீதத்திற்கு வகை கூறின. மூலதன ஆக்கத்தில் 18.7 சதவீதம் செலவிடப்பட்ட வேளையில் 62.3 சதவீதம் நுகர்வில் செலவிடப்பட்டது. 1984 ஆம் ஆண்டுக்கான ஒப்பிடத்தக்க எண் தொகைகள் மூலதன ஆக்கத்தின் மீது 19.2 சதவீதமும், நுகர்வில் 59.5 சதவீதமும் ஆகும். மொத்த மூலவளங்களில் பொருட்கள் காரணியல்லாத பணிகள் என்பவற்றின் ஏற்றுமதிகள் 1984 இன் 21.4 சதவீதத்திற்கு எதிராக 1985 இல் 19.0 சதவீதமாக அமைந்தன.

முந்திய இரு ஆண்டுகளுக்கும் மாருக, உள்நாட்டுச் சேமிப்புக்கள் 1984 இன் ரூ. 306,000 இலட்சத்திலிருந்து நடைமுறையாண்டில் 28.3 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்து 1985 இல் ரூ. 219,000 இலட்சத்தினை அடைந்தன. சந்தை விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்நாட்டுச் சேமிப்புக்களின் பங்கு 1984 இன் 19.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1985 இல் 13.7 சதவீதமாக அமைந்தன. தேறிய வெளிநாட்டுக் காரணி வருவாயும் தனியார் மாற்றல்களையும் உள்ளடக்கிய மொத்தத் தேசிய சேமிப்புக்கள் 24.6 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்து 1985 இல் ரூ. 258,000 இலட்சத்தினை அடைந்தன. மொத்த உள்நாட்டு உற்பத்தியுடனுன தேசிய சேமிப்புக்களின் விகிதாசாரம் 1984 இன் 22.2 சதவீதத்திலிருந்து 1985 இல் 16.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**துறைவாரியான செயலாற்றம்**

வேளாண்மைத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சியே 1985 இல் ஏற்பட்ட மிகவும் குறிப்பிடத்தக்க துறைவாரியான வளர்ச்சியாகும். மிகவும் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் தெங்கு, நெல் உற்பத்திகளில் காணப்பட்டன. இவை இரண்டும் முந்திய ஆண்டில் வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன.

1984 இல் 16 சதவீதத்தினுல் அதிகரித்த தேயிலை உற்பத்தி 1984 இன் 2,080 இலட்சம் கிலோக்கிரும்களிலிருந்து மேலும் 3 சதவீதத்தினுல் அதிகரித்து 1985 இல் 2,140 இலட்சம் கிலோக்கிரும்களாக விளங்கியது. தேயிலை உற்பத்தியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அபிவிருத்தியாக விளங்கியது யாதெனில் அதிகரித்த உற்பத்தி முழுவதும் தாழ் பிரதேசத்திலிருந்து வந்ததுடன் முதற் தடவையாக இவை மொத்தத் தேசிய உற்பத்தியில் ஆகக் கூடிய பங்கினை வழங்கியமையே யாகும். முந்திய ஆண்டில் ஏற்பட்ட பயன்தரும் தேயிலை விலைகள் காரணமாகச் சிறு உடமைப் பயிர்ச் செய்கையாளர்களால் வழங்கப்பட்ட இசைவினைக் காட்டுவதாக இவ் உயர்ந்த அதிகரிப்புக் காணப்படுகின்றது.

அண்மை ஆண்டுகளில் உயர்ந்த மட்டத்தினை அடைந்த இறப்பர் உற்பத்தி 40 இலட்சம் கிலோக்கிரும்களினுல் வீழ்ச்சியடைந்து 1985 இல் 1,380 இலட்சம் கிலோக்கிரும்களை அடைந்தது. பாலெடுத்தலின் கீழான பரப்பளவும் விளைவு மட்டங்களும் நிலையாகவே இருக்க உற்பத்திப் பிரதேசங்களில் ஏற்பட்ட மேலதிக மழை பாலெடுத்தலைக் குறைத்தது. முந்திய ஆண்டினைப் போன்று உற்பத்தியில் ஏற்பட்ட முழு வீழ்ச்சியும் அரசதுறைப் பெருந்தோட்டங்களிலேயே ஏற்பட்டது.

தெங்கு உற்பத்தி 52 சதவீதத்தினுல் அதிகரித்து புதியதோர் உச்ச அளவான 29,580 இலட்சம் தேங்காய்களை அடைந்தது. இது 1972 தொடக்கம் காணப்பட்ட உற்பத்தியில் ஆகக் கூடியதொன்ருகும். முந்திய ஆண்டின் சாதகமான காலநிலை நிலைமைகளும் அதிகரித்த வளமாக்கிப் பயன்பாடும் இவ் அதிகரிப்பிற்கு வகை கூறின.

பாதகமான காலநிலை நிலைமைகள் காரணமாகச் சென்ற ஆண்டில் வீழ்ச்சியினைப் பதிவு செய்த நெல் உற்பத்தி 1984/85 பெரும்போக காலத்தில் மீட்புப் பெற்று 17.5 இலட்சம் மெற்றிக் தொன்களையடைந்தது. முந்திய பெரும்போக காலத்தில் ஏற்பட்ட 29 சதவீத அதிகரிப்பு துரதிட்டவசமாக 1985 சிறுபோக காலத்தில் நாட்டின் நெல் பயிரிடும் பல பிரதேசங்களில் வெள்ளப் பெருக்குப் பயிரினைப் பாதித்தமையினுல் ஏற்பட்ட 14 சதவீதம் (150,000 மெற்றிக் தொன்கள்) கொண்ட வீழ்ச்சியினுல் ஓரளவிற்கு எதிரீடு செய்யப்பட்டது. இதன் விளைவாக 1985 இல் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு 10 சதவீதமாக மட்டுமிருந்தது. வரண்ட பிரதேச நெற் செய்கைப் பிரதேசங்களில் சில மிக உயர்ந்த சராசரி விளைச்சலைக் கொண்டிருந்தன. இவற்றில் மிகவும் குறிப்பிடத்தக்கவை உடவளவை, மகாவலி ''எச்'' பிரதேசம், பொலநறுவை மாவட்டங்களாகும்.

சிறு உணவுப் பயிர்களின் செயலாற்றம் 1985 இல் தொடர்ந்தும் குறைவாகவே விளங்கியது. பெரும்போக காலத்தில் நெல் உற்பத்திக்குப் போதியளவு நீர் கிடைக்கக் கூடியதாக இருந்தமை இக்காலப்பகுதியில் சிறு உணவுப் பயிர்களின் பயிரிடல் நிலப்பரப்புக் குறைவடைவதற்கு முக்கிய காரணியாக அமைந்தது. சிறுபோக காலத்தில் சிறு உணவுப் பயிர்களின் உற்பத்தியில் அதிகரிப்புக் காணப்பட்டது. இது பெரும்போக காலத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியில் ஒரு பகுதியினை மட்டும் எதிரீடு செய்தது.

மிளகாய், வெங்காயம், நிலக்கடலை, உழுந்து என்பவற்றில் அதிகரித்த உற்பத்தி காணப்பட்டது. வடக்குக் கிழக்கு மாகாணங்களிலிருந்து கிடைத்த மிளகாய், வெங்காயம் என்பவற்றின் குறைவான நிரம்பல் ஏனைய பிரதேசங்களில் அதனைப் பயிரிடுவதற்கு ஊக்குவிப்பதாக அமைந்தது. மறுபுறம் அரிசியின் விலைகள் குறைவடைந்தமையினால் சோளம், சோயா, கிழங்குகள் போன்ற அரிசியின் பிரதியீட்டுப் பொருட்களின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது.

ஏற்றுமதித் தரவுகளிலிருந்து பெறப்பட்ட மறைமுக மதிப்பீடுகள் அதிகமான சிறு ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளமையைக் காட்டு கின்றன. மிளகு, கராம்பு, சாதிக்காய், வெற்றிலை, அத்தியாவசிய எண்ணெய்கள் என்பனவற்றின் உற்பத்தி கணிசமாக வீழ்ச்சியடைந்துள்ளது. பருவகால காரணி கள் இக்குறைவான வெளியீட்டில் செல்வாக்கைச் செலுத்தியிருக்கலாம். இதற்கு மாறாக கோப்பி, ஏலக்காய், எள்ளு, கொக்கோ என்பவற்றின் உற்பத்தி 1985 இல் அதிகரித்தமை சிறந்த பண்ணுட்டு விலைகள், சிறந்த வசதிகள் இரண்டிற்கு மான அவற்றின் இசைவினைக் காட்டுகின்றது.

கைத்தொழில் வெளியீடு முந்திய ஆண்டின் 15 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1985 இல் 5 சதவீதத்தினால் அதிகரித்தது. கைத்தொழில் வெளி யீட்டில் ஏற்பட்ட இம்மெதுவான வளர்ச்சி முக்கியமாகப் பெற்றோலிய வெளியீடு வீழ்ச்சியடைந்தமையினாலும் வேறு சில முக்கியமான அரசதுறைக் கைத்தொழில் கூட்டுத்தாபனங்களின் திறமையற்ற செயலாற்றத்தினாலும் ஏற்பட்டதாகும். தனி யார் துறைக் கைத்தொழிலின் பெறுமதி 20 சதவீதத்தினால் அதிகரித்தது. ஆனால் அரசதுறைக் கைத்தொழில் 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பெற் றோலியக் கைத்தொழில் உள்ளடக்கப்படாவிடின் ஏனைய அரசதுறைக் கைத் தொழில்கள் 2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. வடக்கு, கிழக்கு மாகாணங் களில் ஏற்பட்ட குழப்பங்கள் இப்பிரதேசத்தில் அமைந்துள்ள சில அரசதுறைக் கைத்தொழில் கூட்டுத்தாபனங்களின் பின்தங்கிய செயலாற்றத்திற்குக் காரண மாயின.

தனியார்துறையில் உணவு, குடிவகைகள், புகையிலை, புடவைகளும் அணியும் ஆடைகளும், தாளும், தாள் உற்பத்திகளும் என்பனவற்றின் வெளியீடு 20 சத வீதத்தினால் அதிகரித்தன. பாதகமான வெளிநாட்டு, உள்நாட்டுக் காரணிகள் 1985 இன் கைத்தொழில் செயலாற்றத்தில் செல்வாக்கைச் செலுத்தின. கைத் தொழில் ஏற்றுமதிகளுக்கான குறைவான கேள்வியும் தீர்வையற்ற கட்டுப்பாடு களும் ஏற்றுமதிகளின் வளர்ச்சியில் பாரதூரமான தாக்கத்தினைக் கொண்டிருந் தன.

சுரங்க, பார்க்குழித்துறையில் ஏற்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வளர்ச்சி கட்டடப் பொருட்களுக்கான குறைவான கேள்வி, இரத்தினக் கற்களின் குறை வான ஏற்றுமதிகள் என்பன காரணமாக ஏற்பட்டதாகும். 1978 தொடக்கம் 1980 வரை மிக உயர்ந்த வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்த கட்டடவாக்கத் துறை அதன்பின் மந்தநிலையடையத் தொடங்கியது. இது மகாவலித் திட்டத்தின் அதிகமாக கட்டுமான வேலைகள் பூர்த்தியடைந்தமையினாலும் வீடுகளுக்கான நீண்டகாலக் கேள்வி ஓரளவு நிறைவேற்றப்பட்டு இருந்தமையினாலும் அரசதுறை யில் கட்டடநடவடிக்கைகள் குறைவடைந்தமையினாலும் அரசின் வீடமைப்பு குறைந்தளவிலான கட்டடவாக்கத்திற்கு மாற்றமடைந்தமையினாலும் ஏற்பட்ட தாகும்.

பணிகள் துறை சுற்றுலா தொடர்பான பணிகளில் ஏற்பட்ட மந்தம் காரணமாகச் சிறிதளவே வளர்ச்சியடைந்தது. சுற்றுலா வருகைகள் 19 சத வீதத்தினுல் வீழ்ச்சியடைய சுற்றுலா வருவாய்களும் சௌஉ நியதிகளில் 30 சத வீதத்தினுல் வீழ்ச்சியடைந்தன. சுற்றுலா வருவாய்கள் 1985 இல் ரூ. 20,000 இலட்சமாக அல்லது சௌஉ 720 இலட்சமாக மட்டும் அமைந்தன. சுற்றுலா வருகைகள் மிக உயர்ந்த உச்சமட்டத்தையடைந்திருந்த 1982 உடன் தொடர்புறுத்தி பார்க்கையில் 1985 இல் 37 சதவீதத்திற்கும் குறைவான வருகைகளேயே கொண்டிருந்தது. சுற்றுலாவில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சி சுற்றுலா விடுதிகளின் இயலளவில் காணப்பட்ட தொடர்ச்சியான குறைப்பயன்பாடு, உணவக அலுவலர்களின் வேலை நீக்கம், சுற்றுலா தொடர்பான பணிகளில் மந்தநிலை என்பவற்றை ஏற்படுத்தின.

**விலைகள், கூலிகள், தொழில் வாய்ப்பு**

1985 இன் பொருளாதார, அபிவிருத்தியில் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சம் விலைகள் வீழ்ச்சியடைந்து சென்றமையாகும். கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினுல் அளவிடப்பட்டவாறுன நுகர்வோர் விலைகள் 1985 இல் 1.5 சதவீதத்தினுல் மட்டும் உயர்வடைந்தது. இது 1984 இல் ஏற்பட்ட ஆண்டுச் சராசரி அதிகரிப்பான 17 சதவீதத்திற்கு மாறுனதாகும். புள்ளிக்குப் புள்ளி அடிப்படையிலும் (திசெம்பரிலிருந்து திசெம்பருக்கு) கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் இதே அளவிலேயே அதிகரித்தது. இது 1983 திசெம்பருக்கும் 1984 திசெம்பருக்கும் இடையிலான 9.5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடத்தக்கது. நுகர்வோர் விலையின் இம்மெதுவான அதிகரிப்பு 1978 இலிருந்து ஏற்பட்டவற்றில் ஆகக் குறைவானதும் பன்னுட்டு நுகர்வோர் விலை அதிகரிப்புகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் சாதகமானதுமாகும்.

விலைகளில் குறைவான அதிகரிப்புக்கள் ஏற்பட்டமைக்கான காரணிகளில் மிக முக்கியமானது, வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தியும், கிடைக்கக் கூடிய தன்மை அதிகரித்தமையும் தேயிலை, தெங்குப் பொருட்களின் பன்னுட்டு விலைகளில் ஏற்பட்ட மந்த நிலைமையுமாகும். இதன் விளைவாக உணவு விலைகள் மிகவும் சிறிதளவாகவே அதிகரித்தன. நிலையான எரிபொருள் விலைகளும் 1984 இல் ஏற்பட்ட 10.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1985 இல் 3.2 சதவீதத்தினுல் மட்டும் அதிகரித்த குறைவான இறக்குமதி விலைகளும் குறிப்பிடத்தக்க காரணியாகும். இவ் அபிவிருத்திக்கு 1984 இல் அறிமுகப்படுத்தப்பட்ட கட்டுப்படுத்தப்பட்ட நாணயக் கொடுகடன் கொள்கை தொடர்ந்தமையும் 1984 இன் விரிவுத் தாக்கமற்ற இறைக் கொள்கைகளின் காலம் தாழ்ந்த விளைவுகளும் உதவின.

தேயிலை, தெங்குப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட கூடியளவு வீழ்ச்சியினதும் இறப்பரின் விலைகளில் ஏற்பட்ட மிதமான வீழ்ச்சிகளினதும் விளைவாக 1985 இல் மொத்த விற்பனை விலைச் சுட்டெண் 50 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. 1985 இல் மொத்த விற்பனவு விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட வழமைக்கு மாறுன மிகப்பெரும் வீழ்ச்சியானது மிகக் கவனத்துடன் விளக்கப்பட வேண்டும். ஏனெனில் ஏற்றுமதி விலைகளின் மிகக் கூடியளவு அதிகரிப்பின் காரணமாக 1984 இல் இது கணிசமாக அதிகரித்திருந்தது.

அண்மை ஆண்டுகளில் ஏற்பட்ட அனுபவத்திற்கு மாறாக 1985 இல் குறைவான பணவீக்க வீதம் காரணமாக உண்மையான கூலி மட்டங்கள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. பாடசாலை ஆசிரியர்கள் நீங்கலான அரசதுறை வேலையாட்களின் ஆகக் குறைந்த கூலி வீதங்கள் 1985 சனவரியில் மேலதிகமாக ரூ. 100 படியாக வழங்கப்பட்டமை காரணமாக 15 சதவீதத்தினால் அதிகரித்தது. அரசதுறையின் உண்மையான கூலி வீதங்கள் 14 சதவீதத்தினால் அதிகரித்தன. அரச பாடசாலை ஆசிரியர்களின் சம்பளங்கள் மீளாய்வு செய்யப்பட்டமை அவர்களது கூலி வீத சுட்டெண்ணில் 17 சதவீத அதிகரிப்பினையும் உண்மையான கூலிகளில் 15 சதவீத அதிகரிப்பினையும் ஏற்படுத்தியது. கூலி நிர்ணய சபை வர்த்தக ஊழியர்களின் கூலி வீதங்கள் 9 சதவீதத்தினால் அதிகரித்தது. ஆகக் கூடிய அதிகரிப்பு கைத்தொழில், வர்த்தக வேலையாட்களிடையே (14 சதவீதம்) ஏற்பட்ட வேளையில் வேளாண்மைத்துறையின் கூலி வீதங்கள் 10 சதவீதத்தினால் அதிகரித்தன.

அரசதுறையின் வேலை வாய்ப்பு 1.5 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் அரசுசார் நிறுவனங்களின் வேலை வாய்ப்பு 2.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அரசுசார் நிறுவனங்களின் வேலை வாய்ப்பு வீழ்ச்சியடைந்தமைக்கான முக்கிய காரணிகள் அரச பெருந்தோட்டங்களில் தொழிலாளர் படையினை மீள அமைத்தமை காரணமாக அமைய வேலையாட்கள் வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டமையும் வன்கல, சீமெந்து, தாள் பொருட்கள், உருக்குக் கூட்டுத்தாபனங்கள் போன்ற பல கூட்டுத்தாபனங்களில் வேலை வாய்ப்பு வீழ்ச்சியடைந்தமையும் ஆகும். பெற்றோலியம், கட்டடப் பொருட்கள், டயர்களும் ரியூப்புக்களும், புடவைகள், வீடமைப்பு, போக்குவரத்து என்பனவற்றின் உற்பத்தியுடன் தொடர்புடைய அரசுசார் நிறுவனங்களின் தொழில் வாய்ப்பு அதிகரித்தது.

தனியார்துறையின் தொழில் வாய்ப்புப் பற்றி உறுதியான தரவு எதுவும் இல்லாதபோதிலும் நன்கமைந்த, நன்கமையாத தனியார் துறைகளில் தொழில் வாய்ப்பு அதிகரித்துள்ளதாகக் காணப்படுகின்றது. ஆயினும் தனியார் துறையின் தொழில் வாய்ப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு முந்திய ஆண்டினைவிட மெதுவான வீதத்தில் ஏற்பட்டிருக்கலாம். வரையறுக்கப்பட்ட அரச, தனியார் கூட்டு நிலையங்களின் திட்டமிடப்பட்ட ஆய்வின்படி 1985/86 இல் எதிர்பார்க்கப்படும் ஏறக்குறைய 11 சதவீதங் கொண்ட தொழில் வாய்ப்பு வளர்ச்சியானது 1984/85 இன் 8.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடத்தக்கது.

**வர்த்தகம்**

1985 இல் இலங்கையின் வர்த்தகச் செயலாற்றம் பாதகமாக அமைந்தது. 1972 இன் பின் முதல் தடவையாக ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்த வேளையில் இறக்குமதிகள் கடந்த இரு ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த வீதத்தில் வளர்ச்சியடைந்தன.

சி.உ. நியதிகளில் ஏற்றுமதி வருவாய்கள் 8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் இறக்குமதிகள் மீதான செலவு 5 சதவீதத்தினால் அதிகரித்தன. இதன் விளைவாக வர்த்தகப் பற்றாக்குறை 1984 இற்கு மாறாக அதிகளவில் அதிகரித்தது. 1984 இல் ஏற்றுமதி வருவாய்கள் 44 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் இறக்குமதிச் செலவு 0.6 சதவீதத்தினால் மட்டும் அதிகரித்தது.

ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி பெரும்பாலும் தேயிலை, இறப்பர் என்ப வற்றிலிருந்தான குறைவான வருவாய்கள் காரணமாக ஏற்பட்டதாகும். பன்னாட் டுச் சந்தையில் தெங்கு விலைகளில் கடுமையான வீழ்ச்சி காணப்பட்டபோதிலும் தெங்கு ஏற்றுமதிகளின் அளவில் ஏற்பட்ட வழமைக்கு மாறான உயர்ந்த அதிகரிப்பு தெங்குப் பொருட்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் அதிகரிப்பை ஏற் படுத்தியது. சிறு வேளாண்மைப் பயிர்கள் இரத்தினக் கற்கள் போன்ற ஏனைய ஏற்றுமதிகளும் வீழ்ச்சியடைந்தன. கடந்த காலத்தில் விரைவான அதிகரிப்புக் களைக் காட்டிய புடவைகளும் ஆடைகளும் உண்மை நியதிகளில் வீழ்ச்சியடைந்தன.

இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு பெரும்பாலும் நுகர்வுப்பொருட்களில், குறிப்பாக உணவு, குடிவகைகள், ஏனைய நுகர்வுப் பொருட்கள் என்பவற்றில் ஏற்பட்ட உயர்ந்தளவான செலவு காரணமாக ஏற்பட்டதாகும். ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்த வேளையில் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் அதிகரித்தமை சென்மதி நிலுவையில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தின.

தற்காலிக சுங்கத் தரவுகளின்படி இறக்குமதிகள் மீதான செலவு ரூ. 490,690 இலட்சமாகவும் (சிஎஉ 17,760 இலட்சம்), ஏற்றுமதிகள் ரூ. 350,350 இலட்சமாகவும் (சிஎஉ 12,680 இலட்சம்) அமைந்தன. இதன் விளைவாக ஏற்படும் ரூ.140,340 இலட்சம் கொண்ட குறை(சிஎஉ 5,080 இலட்சம்)யானது ரூ. 99,070 இலட்சங் கொண்ட (சிஎஉ 3,800 இலட்சம்) முந்திய ஆண்டின் குறையினைவிட சிஎஉ நியதிகளில் 34 சதவீதம் கூடுதலாக விளங்கியது. சுங்கத் தரவினைக் காலந் தாழ்த்தியமை, பதிவு செய்தல் தொடர்பான ஏனைய காரணி களுக்கு ஏற்பச் சீராக்கம் செய்யுமிடத்து வர்த்தகக் குறை ரூ. 167,100 இலட்சமாக (சிஎஉ 6,050 இலட்சம்) விளங்கியது. இது 1984 இன் ரூ. 101,940 இலட்சங் கொண்ட (சிஎஉ 3,910 இலட்சம்) குறையினைவிட சிஎஉ நியதிகளில் 55 சதவீதம் கூடுதலானதாகும்.

கடந்த இரு ஆண்டுகளிலும் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கொண்ட வர்த்தக மாற்று விகிதங்களின் பின்னர் ஏற்றுமதி, இறக்குமதிகளின் பாதகமான விலைகள் 1985 இல் இலங்கையின் வர்த்தக மாற்று விகிதத்தில் ஏறத்தாள 23 சதவீத வீழ்ச்சியினை ஏற்படுத்தின. மத்திய வங்கியின் புதிய வர்த் தகச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டபடி ஏற்றுமதி விலைகள் 15 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தவேளையில் இறக்குமதி விலைகள் 11 சதவீதத்தினால் அதிகரித்தன. 1985 இல் ஏற்றுமதி இறக்குமதி விகிதாசாரம் விரிவடைந்தது. 1984 இன் மொத்த இறக்குமதிகளின் 79 சதவீதமாக அமைந்த ஏற்றுமதிகள் 1985 இல் 68 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. இவ்வாறு சொந்த மூலவளங்களிலிருந்து இறக்குமதிகளை நிதியிடக்கூடிய ஆற்றல் பலவீனமடைந்து வெளிநாட்டு நிதியினை நாடவேண்டிய தேவை அதிகரித்தது. உதவி பெறுவது மிகவும் கடினமாகவுள்ள ஒரு பன்னாட்டுப் பொருளாதார சூழ்நிலையில் இம்மட்டத்திலான வெளிநாட்டு நிதியிடலை அடிப்படையாகக் கொண்ட இறக்குமதிகள் எதிர்காலத்தில் தாக்குப் பிடிக்கத்தக்கனவல்ல.

**சென்மதி நிலுவை**

நடைமுறைக் கணக்கு, பொதுவான நிலுவை ஆகிய இரண்டு நியதிகளிலும் 1985 இன் சென்மதி நிலுவை விளைவுகள் கணிசமானளவிற்கு மோசமடைந்தன. இவ்வாண்டுக் காலத்தில் வணிக மற்றும் பணிகள் கணக்கின் பற்றுக்குறை விரிவடைந்தமை, தேறிய தனியார்துறை மாற்றல்கள் சிறிதளவாக வீழ்ச்சி அடைந்தமை ஆகியவற்றுடன் அலுவல்சார் மாற்றல்களும் கணிசமாக வீழ்ச்சியடைந்தன. இதன் விளைவாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக நடைமுறைக் கணக்குப் பற்றுக்குறை 1984 இன் 0.8 சதவீதத்திலிருந்து 1985 இல் 7.2 சதவீதத்திற்கு அதிகரித்தது.

1985 இல் வணிகக் கணக்கின் பற்றுக்குறை 1984 இன் ரூ. 118,500 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் (சிஎஉ 4,530 இலட்சம்) ரூ. 193,280 இலட்சங்களாக (சிஎஉ 6,970 இலட்சம்) விளங்கியது. சிஎஉ நியதிகளில், ஏற்றுமதி 10.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைய இறக்குமதிகள் 5.3 சதவீதத்தினால் அதிகரித்தன. இவ்வாண்டுக் காலத்தில் நுகர்வுப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்த வேளையில் முதலீட்டுப் பொருட்கள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தது.

இவ்வாண்டுக் காலத்தில் பணிகள் கணக்கில் ஏற்பட்ட பற்றுக்குறை சிஎஉ நியதிகளில் ஏறத்தாழ இருமடங்காகியது. துறைமுகம், பொருட்கள் கொண்டு செல்லல், காப்புறுதி என்பனவற்றின் காரணமாக வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய வெளிப்பாய்ச்சலில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள், சுற்றுலாவில் இருந்தான தேறிய வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சி, ஏனைய பல்வகைப் பணிகள் காரணமாகத் தேறிய வெளிப்பாய்ச்சலில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன பணிகள் கணக்கின் பற்றுக்குறை விரிவடைவதற்கு முக்கிய காரணங்களாக இருந்தன. எனினும் 1985 இன் பணிகள் கணக்கில் தொடர்ந்தும் பெரும் பற்றுவிடயமாக இருந்த வட்டிக் கொடுப்பனவுகளின் தேறிய வெளிப்பாய்ச்சல் 1985 இல் சிறிதளவு குறைவாக இருந்தது. 1977 தொடக்கம் 1981 வரையிலான காலப்பகுதியில் சென்மதி நிலுவை மீதான தாக்கத்தினைக் குறைத்த பணிகள் கணக்குக் கடந்த நான்கு ஆண்டுகளிலும் அதே மாதிரியான பங்கினை ஆற்றமுடியாதிருந்தது. பணிகள் கணக்கிற்கூடாக ஏற்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய வெளிப்பாய்ச்சல் 1985 இனது நடைமுறைக் கணக்கின் பற்றுக்குறையின் 30 சதவீதத்திற்கு வகை கூறியது.

தனியார் பண அனுப்பல்களின் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல் ரூபா நியதிகளில் 5 சதவீதத்தினால் அதிகரித்தபோதும் சிஎஉ நியதிகளில் வீழ்ச்சியடைந்தன. முன்னைய ஆண்டின் ரூ. 76,530 இலட்சத்துடன் (சிஎஉ 2,940 இலட்சம்) ஒப்பிடுகையில் 1985 இல் ரூ. 80,200 இலட்சங்களாக (சிஎஉ 2,910 இலட்சம்) விளங்கின. 1985 இல் தனியார் மாற்றல்களின் தேறிய பெறுகைகள் 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து ரூ. 72,980 இலட்சங்களாக (சிஎஉ 2,650 இலட்சம்) விளங்கியது. முன்னைய ஆண்டினைப் போன்றே, இவ்வாண்டுக் காலத்திலும் தேயிலைக்கு அடுத்து தனியாரின் மாற்றல்களே சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கில் தனிப்பெரும் வரவு விடயமாக விளங்குகின்றது. செயற்றிட்ட, பண்டக் கொடைகளையும் உள்ளடக்கியுள்ள அலுவல்சார் மாற்றல்கள் இவ்வாண்டுக் காலத்தில் வீழ்ச்சியடைந்தன.

தனியார், அரசதுறைகள் இரண்டிற்குமான நாணயமல்லா மூலதனத்தின் தேறிய உட்பாய்ச்சல்கள் நடைமுறைக் கணக்கிலுள்ள முழுப் பற்றுக்குறையையும் நிதியிடப் போதுமானதாக இல்லை. இதன் விளைவாக ரூ. 10,600 இலட்சம் (சிஎஉ 1,110 இலட்சம்) கொண்ட பற்றுக்குறை தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களைக் குறைப்பதன் மூலம் நிரப்பப்பட்டது. இவ்விளைவு, மொத்த நிலுவையில் ரூ. 70,620 இலட்சம் (சிஎஉ 2,970 இலட்சம்) மிகை காணப்பட்ட 1984 ஆம் ஆண்டின் அபிவிருத்திகளுடன் மாறுபடுவதாக உள்ளது.

1985 இல் இலங்கையின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் சிஎஉ நியதிகளில் 17 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தன. சென்மதி நிலுவையின் பொது வான செயல் விளைவில் ஏற்பட்ட மிகக் கூடியளவு மோசமான தன்மையைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இவ்வாண்டுக் காலத்தில் தேறிய வெளிநாட்டுச் சொத் துக்கள் 39 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தன. 1985 இறுதியில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களின் மட்டம் 1986 இற்காகத் திட்டமிடப்பட்ட 3.8 மாத இறக்குமதிகளுக்கு நிதியிடப் போதுமானதாக இருந்தது.

1985 ஆம் ஆண்டுப் பகுதியில் இலங்கை ரூபா எல்லா முக்கிய நாணயங் களுக்கெதிராகவும் தேய்வடைந்தது. இலங்கை ரூபா ஐ. அ. டொலருக்கெதிராக 4.1. சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. ரூபா, டியூச் மார்க்கு, பிரான்சிய பிராங்கு ஆகிய ஒவ்வொன்றிற்கும் எதிராக 25 சதவீதத்தினுல் தேய்வடைந்த வேளையில் யப்பானிய யென், ஐக்கிய இராச்சிய பவுண் ஒவ்வொன்றிற்கும் எதி ராக 23 சத வீதத்தினுல் தேய்வடைந்தது.

முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் கணிக்கப்பட்ட வர்த்தக பெயரளவு செலாவணி வீதங்கள் என வரைவிலக்கணம் செய்யப்படும் இலங்கையின் பெய ரளவு தாக்கமுள்ள செலாவணி வீதம் 1985 இல் 16.0 சதவீதத்தினுல் தேய் வடைந்தது. இலங்கைக்கும் இவ்வர்த்தகப் பங்காளர்களுக்குமிடையிலான பண வீக்க வேறுபாட்டிற்காகச் சுட்டெண் சீராக்கம் செய்யப்பட்ட உண்மையில் தாக்கமுள்ள செலாவணி வீதம் 1985 இல் 10.8 சதவீதத்தினுல் தேய்வடைந்தது.

குறுங்காலக் கடன்களையும் மற்றும் வர்த்தக வரவுகளையும் உள்ளடக்கிய இலங்கையின் மொத்த வெளிநின்ற கடன்பாடு சிஎஉ நியதிகளில் 4 சதவீதத்தினுல் அதிகரித்ததுடன் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான இதன் விகிதம் 1984 இல் 52 சதவீதத்திலிருந்து 1985 இல் 54 சதவீதத்திற்கு அதிகரித்தது.

பன்னுட்டு நாணய நிதியத்திலிருந்து புதிய எடுப்பனவுகள் இல்லாமையினுல் 1985 இல் பன்னுட்டு நாணய நிதியத்திற்கான இலங்கையின் படுகடன் கடப்பாடு கள் முன்னைய ஆண்டின் ரூ. 86,440 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 3,280 இலட்சம்) 1985 இல் ரூ. 79,140 இலட்சங்களுக்கு (சிஎஉ 2,930 இலட்சம்) வீழ்ச்சி யடைந்தது.

பொருட்கள், பணிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களுக்கான மொத்தப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் (சிஎஉ க்களில்) 1984 இன் 17.5 சதவீதத்தி லிருந்து 1985 இல் 22.4 சதவீதத்திற்கு அதிகரித்தன. இக்கூடியளவு அதிகரிப்புக்கு ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட குறைப்பு, படுகடன் பணிக் கொடுப்பனவு களில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றின் இணைந்த விளைவே காரணமாகும். பன்னுட்டு நாணய நிதியக் கொடுக்கல் வாங்கல்கள் நீங்கலாகப் படுகடன் பணி விகிதம் 1984 இன் 14.5 சதவீதத்திலிருந்து 1985 இல் 18.5 சதவீதத்திற்கு

அதிகரித்தது. வணிக ஏற்றுமதிகள், பணிகள், மற்றும் தனியார் மாற்றல்களி லிருந்தான பெறுகைகளின் விகிதமாகப் பொதுவான படுகடன் பணிக் கொடுப் பனவுகளை நோக்கின் 1984 இற்கும், 1985 இற்கும் இடையில் 15.0 சதவீதத்தி லிருந்து 19.0 சதவீதத்திற்கு அதிகரித்தன.

**நிதிச் செயலாற்றம்**

1985 இன் வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகள் முந்திய ஆண்டினைவிட மிகவும் விரிவுத்தாக்கத்தினைக் கொண்டிருந்தன. ஏற்றுமதிப் பொருட்களின் விலை கள் குறைவடைந்தமையினால் அரசின் அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கியமாகப் பாதுகாப்புத் தொடர்பான செலவு, காரணமாக அரசின் செலவில் தொடர்ந்து ஏற்பட்ட விரிவு அதிகரித்த வரவு செலவுத்திட்டப் பற்றுக் குறைக்கு வழி வகுத்தது. இதன் விளைவாக விரிவுத்தாக்க நிதியிடல் ஏற்பட்டது.

அரசின் அரசிறையில் ஏற்பட்ட மெதுவான போக்கு பெரும்பாலும் ஏற்று மதித் தீர்வைகளில் வீழ்ச்சியியை ஏற்படுத்திய முக்கிய ஏற்றுமதிப் பொருட்களின் கூடியளவு விலை வீழ்ச்சி காரணமாக ஏற்பட்டதாகும். ஏற்றுமதிகளிலிருந்தான அரசின் அரசிறை 1985 இல் 41 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

அரசின் செலவு ரூ. 535,920 இலட்சத்திலிருந்து ரூ. 671,030 இலட்சத் திற்கு அதிகரித்தன. மீண்டெழும் செலவில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காணப் பட்டபோதிலும் அரசு நடைமுறைக் கணக்குத் தொழில்பாடுகளில் மிகையை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது. ஆயினும் இத்தொகை முந்திய ஆண்டினைவிடக் குறிப்பிடத்தக்களவு குறைவாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும் ரூ. 313,320 இலட்சமாக விளங்கிய மூலதனச் செலவு முந்திய ஆண்டினைவிட 44 சதவீதம் கூடுதலானதாகும்.

அரசின் குறைவான அரசிறைகளினதும் உயர்ந்த செலவினதும் விளைவாக வரவு செலவுத்திட்டபற்றுக்குறையின் அளவு 1984 இனை விட ஏறக்குறைய இரு மடங்கு அளவாக விளங்கியது. இது ரூ. 158,610 இலட்சத்திலிருந்து ரூ. 297,590 இலட்சத்திற்கு அதிகரித்தது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வரவு செலவுத்திட்டப் பற்றுக் குறையினை 1984 இன் 10 சதவீதத்திலிருந்து 1985 இல் 19 சதவீதத்திற்கு உயர்த்தியது.

பற்றுக் குறையை நிதியிடுவதில் வெளிநாட்டு மூலங்களிலிருந்தும் விரிவுத்தாக்க மற்ற மூலங்களிலிருந்தும் கிடைக்கத்தக்கதாகவிருந்த மூலவளங்கள் தேவையான அளவினைவிடக் குறைவாக விளங்கியமையால் அரசு விரிவுத்தாக்கமுடைய நிதியிடல் மூலங்களை நாடவேண்டியதாயிற்று. வங்கியல்லா மூலங்களிலிருந்தான உள்நாட்டு நிதியிடல் ரூ. 65,880 இலட்சத்திலிருந்து ரூ. 105,970 இலட்சத்திற்கு அதி கரித்தது. பற்றுக் குறையில் வெளிநாட்டு நிதியிடலின் விகிதாசாரம் 1984 இன் 71 சதவீதத்திலிருந்து 1985 இல் 43 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெளிநாட்டு நிதியிடலின் விகிதம் 1984 இன் 7 சத வீதத்திலிருந்து 1985 இல் 8 சதவிகிதத்திற்கு அதிகரித்தது.

**நாணயமும் கொடுகடன் வளர்ச்சிகளும்**

அரசிற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட கூடியளவு வளர்ச்சி 1985 இன் நாணய போக்குகளில் பெருமளவு செல்வாக்கினைக் கொண்டிருந்தது. அரசிற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட தொடர்ச்சியான வளர்ச்சி யூன் இறுதியில் 15 சதவீதத்திலிருந்து 1985 இறுதியில் 42 சதவீதத்திற்கு உயர்வடைந்த ஆண்டின் பின்னரைப் பகுதியில் மிகத் தெளிவாகப் புலப்பட்டது. 1985 இல் அரசிற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட பெருமளவு வளர்ச்சி 1984 இன் இறுதியில் காணப்பட்ட 17 சதவீதம் கொண்ட வீழ்ச்சிக்கு மாறுன தாக இருந்தது.

இதற்கு மாருக, தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடன் 1985 இல் மெதுவான போக்கினையே கொண்டிருந்தது. கூட்டுறவு நிறுவனங்களுக்கான கொடுகடன் 17 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தமையின் பெருமளவு காரணமாக 1984 இல் 11 சதவீதத்தினுல் வளர்ச்சியடைந்த தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடன் 1985 இறுதியில் 9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. கூட்டுறவு நிறுவனங்களுக்கான கொடுகடனில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சி ஆண்டு முழுவதும் காணப்பட்டமைக்கு நெற்கொள்வனவில் நெல் சந்தைப்படுத்தும் சபை ஆற்றிய பங்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையும், அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் 1984/85 பெரும்போகம், 1985 சிறுபோகம் ஆகிய இரு காலப் பகுதியிலும் வழங்கப்பட்ட கடன்களில் ஏற்பட்ட வீழ்ச்சியும் காரணங்களாகும். 1985 ஆம் ஆண்டுப் பகுதியில் ஏனைய தனியார் துறைக்கான கொடுகடன் 16 சதவீதத்திலிருந்து 11 சதவீதத்திற்கு மெதுவான வீழ்ச்சியைக் கொண்டிருந்தமைக்கு 1984 மாச்சு மாதத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கட்டுப்பாடான நாணய மற்றும் கொடுகடன் கொள்கை வழிமுறைகள் தொடர்ந்தமை, கொடுகடனுக்கான கேள்வி குறிப்பாகத் தேயிலை ஏற்றுமதிக்கான கொடுகடனுக்குக் காணப்பட்ட மந்தமான கேள்வி, பணவீக்க வீதத்தில் ஏற்பட்ட மெதுவான போக்கு என்பன பெருமளவுக்குக் காரணங்களாகும். அதேவேளை வங்கித்தொழில் முறையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் 1984 இறுதியின் 213 சதவீதங் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1985 இறுதியில் 7 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

மேற்குறிப்பிட்ட மாற்றங்கள் விரிந்த பணநிரம்பலின் (M2) வளர்ச்சி 1984 இறுதியின் 17 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1985 இறுதியில் 11 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைவதனை விளைவித்தது. அரசிற்கான தேறிய கொடுகடனில் பெருமளவு வளர்ச்சி காணப்பட்டபோதும் M 2 இன் வளர்ச்சி இம்மட்டத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டமைக்கு 1985 இல் வங்கித்தொழில் முறையின் ஏனைய விடயங்களில் (தேறிய) ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பே (ரூ. 36,270 இலட்சம்) காரணமாகும். 1985 இறுதியில் வெளிநின்ற மத்திய வங்கிப் பிணைகளின் தொகை ரூ. 11,680 இலட்சங்களாக இருந்தமையும், மத்திய வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டமையும் ஏனைய விடயங்களில் (தேறிய) ஏற்பட்ட அதிகரிப்பிற்கு முக்கிய பொறுப்பாக விளங்கின. அதேவேளை 1984 இறுதியில் 14 சதவீதத்தினை அடைந்த குறுகிய பணத்தின் ($M_1$) ஆண்டு வளர்ச்சி வீதம் முதற் காலாண்டில் மெதுவான போக்கினைக் கொண்டிருந்ததெனினும் அடுத்த இரண்டு மாதங்களிலும் உயர்வடைந்து 1985 மே இறுதியில் 20 சதவீதங் கொண்ட உச்ச மட்டத்தினையடைந்தது. ஆண்டின்

பின்னரைப் பகுதியில் M1 இல் ஒழுங்கற்ற தன்மை காணப்பட்டபோதும் 1985 இன் இறுதியில் இது 12 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இது 1983 இலும், 1984 இறுதிகளில் முறையே ஏற்பட்ட 25 சதவீத, 14 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடத்தக்கதாகும். பணவீக்க வீதத்தில் ஏற்பட்ட மெதுவான போக்கினைப் பெருமளவிற்குப் பிரதிபலிக்கின்ற விதத்தில் குறுகிய பணம், விரிந்த பணம் இரண்டினதும் வருவாய் வேகங்கள் 1984 இன் 9.2 சதவீதம், 3.7 சதவீதங்களிலிருந்து 1985 இல் முறையே 8.6 சதவீதத்திற்கும், 3.4 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன.

தேசிய சேமிப்பு வங்கியினால் வைப்பு வீதங்கள் குறைக்கப்பட்டமை, கொடுகடன் உச்ச எல்லைகளினால் உருவாக்கப்பட்ட மிகையான திரவச் சூழ்நிலை, காசு செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு 1985 ஓகத்திலும், செத்தெம்பரிலும் நியதி ஒதுக்கு வீதங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு ஆகியன வர்த்தக வங்கிகளை முதலில் அவற்றின் வைப்பு வீதங்களையும் பின்னர் அவற்றின் கடன் வழங்கல் வீதங்களையும் குறைக்கத் தூண்டின. 1985 ஒத்தோபர் 1 ஆம் நாளிலிருந்து அரச வங்கிகள் முன்னுரிமைக் கடன் வழங்கல் வீதங்களை 1 தொடக்கம் 3 சதவீதப் புள்ளிகளால் குறைத்துக் கொண்டன. வர்த்தக வங்கிகளின் வைப்பு வீதங்களில் வீழ்ச்சி காணப்பட்டபோதும் அவற்றின் தவணை, சேமிப்பு வைப்புக்கள் (போலி நாணயம்) தொடர்ந்தும் உயர்வடைந்தன. இதற்குப் பணவீக்க வீதங்களில் ஏற்பட்ட மெதுவான போக்கின் விளைவாக நிதி சார்ந்த வைப்புக்கள் மீதான வட்டியின் நேர்க்கணிய உண்மை வீதமே காரணமாக இருந்திருக்கலாம். நிதிக் கூட்டு நிலையங்களும் தமது வைப்பு வீதங்களைக் குறைத்துக் கொண்டன.

பணச் சந்தை வீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி பணவீக்க வீதத்தில் ஏற்பட்ட மெதுவான போக்கு என்பனவற்றைக் கருத்திற் கொண்டு 1985 செத்தெம்பர் 1 ஆம் நாளிலிருந்தும் 6 ஆண்டுகள் முதிர்ச்சிக் காலத்துடன் அரச பிணைகள் மீதான வட்டி வீதம் ஆண்டிற்கு 16 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. இதே போன்று முதலாந்தர திறைசேரி உண்டியல்கள் மீதான வீதமும் ஆண்டிற்கு 14 சதவீதத்திலிருந்து 11.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல்கள் மீதான வாங்கும் விற்கும் வீதங்களும் ஆண்டிற்கு 14.2 சதவீதம், 14.0 சதவீதங்களிலிருந்து ஆண்டிற்கு முறையே 11.5 சதவீதத்திற்கும், 11.3 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன.

ஆண்டின் இறுதியில் மத்திய வங்கி, வங்கி வீதத்தினை ஆண்டிற்கு 13 சதவீதத்திலிருந்து 11 சதவீதத்திற்கு இரண்டு சதவீதப் புள்ளிகளினால் குறைந்ததுடன் பயிர்ச்செய்கை, சந்தைப்படுத்தல், மீள் நிதியிடல் வசதிகள் தவிர்ந்த அனைத்து மீள் நிதியிடல் வீதங்களிலும், இதே போன்ற குறைப்பினை நடைமுறைப்படுத்தியது. இவ்வபிவிருத்திகளைத் தொடர்ந்து திறைசேரி உண்டியல் வீதம் ஆண்டிற்கு 11 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

பணச்சந்தையில் மிகையான திரவத்தன்மை பரந்து காணப்பட்டபோதும் ரூ. 870 இலட்சம் பெறுமதி கொண்ட மூன்று புதிய பங்கு வழங்கல்கள் மட்டுமே பொது மக்களுக்கு 1985 ஆம் ஆண்டுப் பகுதியில் வழங்கப்பட்டன. பங்குச் சந்தையில் காணப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள், கருவிகளின் கிடைக்கும் தன்மை மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையையும், பணச்சந்தையிலிருந்து மூலதனச் சந்தைக்கு மூலவளங்களை மாற்றுவதற்கான நிறுவன ரீதியான வடிவமைப்பு வேலைகள் பற்றாக்குறையாக இருந்தமையையும் எடுத்துக் காட்டின.

Central Bank of Sri Lanka
22673
10 JUN 2009
LIBRARY & INFORMATION CENTRE
Communications Department

1984 ஆம் ஆண்டுப் பகுதியில் தனியார்துறைக் கொடுகடன் மீது விதிக்கப்பட்ட கொடுகடன் உச்ச எல்லையும், வர்த்தக வங்கிகளின் அதிகரித்த வைப்புக்களின் மீது விதிக்கப்பட்ட உயர்ந்த ஒதுக்கு விகிதங்களும் 1985 இலும் தொடர்ந்து நடைமுறையில் இருந்தன. மிகையான திரவத் தன்மையை ஈர்த்துக் கொள்ளும் பொருட்டு மத்திய வங்கி அனைத்து வைப்புக்களின் மீதான நியதி ஒதுக்கு விகிதங்களை அதிகரித்தது. இந்நாணயக் கொள்கை வழிமுறைகளுக்கு இசைய ஆண்டின் இறுதியில் குறுகிய பணநிரம்பல் விரிந்த பணநிரம்பல் இரண்டினதும் பணப்பெருக்கி 1984 இன் 1.2 இலும், 3.1 இலும் இருந்து 1985இல் முறையே 1.1 இற்கும், 2.8 இற்கும் வீழ்ச்சியடைந்தது.

1984 இல் பின்பற்றப்பட்ட கட்டுப்பாடான நாணயக் கொள்கை நிலை முன்னுரிமைத் துறைகளுக்குப் போதுமானளவு கொடுகடனை உறுதிப்படுத்துவதற்கான தெரிந்தெடுக்கப்பட்ட கொள்கைகளுடன் சேர்ந்து தொடர்ந்தும் இருந்தது. 1985 ஆம் ஆண்டுப் பகுதியில் முன்னுரிமைத் துறைகளுக்குக் கொடுகடனை வழங்கும் நோக்குடன் பல வழிமுறைகள் பின்பற்றப்பட்டமையின் மூலம் பொருளாதாரத்தில் வழங்கல் பக்கம் ஊக்குவிக்கப்பட்டது. இந்நோக்கத்திற்காகத் தொடக்கப்பட்ட முக்கிய வழிமுறைகளாக ஏற்றுமதி மற்றும் வேளாண்மைக் கடன்கள் கொடுகடன் உச்ச எல்லைகளிலிருந்தும் விலக்கப்பட்டமை, ஏற்றுமதிகள் மீதான மீள் நிதியிடல் வீதங்கள் குறைக்கப்பட்டமை, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் திரவ அடிப்படையை உயர்த்தியமை என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

1985 யூனில் வர்த்தக வங்கிகள் தவணை சேமிப்பு வைப்புப் பொறுப்புக்கள் மீதான அவற்றின் ஒதுக்குத் தேவையில் ஒரு பகுதியை இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் முறிகள் வடிவில் பேணுவதற்கு அனுமதிக்கப்பட்டன. ஆயின் ஒவ்வொரு வர்த்தக வங்கிகளினாலும் அவ்வாறு பேணப்படும் இவ்வொதுக்குகளின் அளவு தவணை சேமிப்பு வைப்புப் பொறுப்புக்களின் மீதான அவற்றின் ஒதுக்குகளில் எட்டிலொரு பகுதியை விஞ்சக்கூடாது. இது இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் தனியார் துறைக்கான கடன் வழங்கல் இயலளவை அதிகரித்தது. 1985 இறுதியில் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் முறிகளில் வர்த்தக வங்கிகளினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடு ரூ. 3,330 இலட்சங்களாக விளங்கியது.